*3*

# முற்பிதாக்களின் காலம், கி.மு. 1921–1706

## *ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் எகிப்துக்கு இடம் பெயர்ந்தது வரை*

## *ஆதி. 11:27-50:26*

**அறிமுகம்—எபிரெயர்களின் ஊழியம்.**—மீட்பர் பற்றிய மங்கலான முதலாவது வாக்குத்தத்தத்தை, (மனித) இனத்திற்கான நம்பிக்கையின் ஒளிக்கதிரை நாம் (ஆதி. 3:15)ல் கண்டுள்ளோம். (ஆனால் இந்த) நம்பிக்கை யானது, ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்ததும் (ஜலபிரளயத்திற்கு) காரணமுமாயிருந்த மோசம் போக்கும் செயல்களின் மத்தியில் ஏறக்குறைய மரித்துப்போன நிலையில் இருந்தது. பெருவெள்ளத்திற்குப் பிறகும் கூட வானமானது மீண்டும் ஒருமுறை இருள் படர்ந்ததாயிற்று. நைல் மற்றும் ஐப்பிராத்து பகுதிகளில் இருந்த தொடக்க கால நாகரீகங்கள் மற்றும் பேரரசின் இருக்கைகள் மிக இழிவான விக்கிரகாராதனைகளின் மையங்களாயின. ஏதோ ஓரிடத்தில், யாரோ ஒருவரால், மெய்யான ஒரே தேவனுக்கான ஒரு நிலைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் அல்லது மனித இனம் நம்பிக்கையற்ற வகையில் இழந்து போகப்படும். இதுவே எபிரெயர் களின் மிக மேன்மையான ஊழியமாய் இருந்தது. சற்று காலத்திற்கு தேவன் காம் மற்றும் யாப்பேத்தின் இனங்களினூடாகக் கடந்து செல்கின்றார். அவர் மாபெரும் செமிட்டிக் (சேமின்) இனத்தையும் கூட அந்த இனத்தின் கல்தேயக் கிளையில் உதித்த ஒரு தனிக் குடும்பத்தைத் தவிர, அவ்வினத்தின் ஊடாகவும் கடந்து செல்லுகிறார். தேவனைப் பற்றிய அறிவை உயிருடன் காத்துக் கொள்வதற்காகவும் மற்றும் இறுதியாக, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட "வித்தின்" மூலமாக எல்லா இனங்களையும் தேவனுடைய ஐக்கியத் திற்குத் திருப்பிக் கொண்டு வருவதற்காகவும் - இப்படிப்பட்டது தெய்வீக நோக்கமாய் உள்ளது - அவர் இவ்வாறு செய்கிறார். இது முதல், ஆர்வ நோக்கானது மனிதர்களின் மீதுள்ளதைக் காட்டிலும் நிகழ்ச்சிகளின்மீது அதிகமாய் மையப்படுத்தப்பட்டுள்ளது, அவர்களில் ஒரு சிலர் மட்டுமே தொடப்படுகின்றனர். பரிசுத்த வரலாற்றாளர், நூற்றாண்டுகளின் இடைவெளியை பெருநடையிட்டுக் கடக்கின்றார், அவர் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகளின் சிகரத்திலிருந்து சிகரத்திற்கு இவ்வாறு கடந்து செல்லுகின்றார். இந்த இடத்திலிருந்து, ஆர்வ நோக்கானது மனிதர்களில் மையம் கொள்ளுகிறது; வரலாற்றின் பிரதான ஓட்டமானது எபிரெயர்கள்

என்ற தனிப்பட்ட இனத்தளவுக்குக் குறுகிவிடுகிறது, மற்றும் இது தொடர்ந்து முழுமையாக வளர்ந்தேறுகிறது. இந்தக் கால கட்டத்தின் வரலாறானது எபிரெயர்களின் யாத்திரைப் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு என்ற மாபெரும் முற்பிதாக்கள் நால்வரின் வரலாற்றைப் பின்பற்றித் தொடருகின்றது.

## I. ஆபிரகாமின் வாழ்வு. (ஆதி. 11:27-25:10.)

"விசுவாசத்தின் தகப்பன்" என்ற வகையில் மற்றும் எபிரெய இனத்தைத் தோற்றுவித்தவரான ஆபிரகாம், எல்லாக் காலங்களிலும் மாபெரும் பாத்திரங்களில் ஒருவராய் இருக்கிறார். அவருடைய வாழ்வானது இயல்பாகவே பின்வரும் இரண்டு பிரதான பிரிவுகளில் அடங்குகிறது: (1) அலைந்து திரிதல்கள், (2) எபிரோனில் குடியமர்ந்த வாழ்வு.

***1. அலைந்து திரிதல்கள்.***—*அ. தொடக்க கால இருப்பிடம்.*—ஆபிரகாம், தொடக்க கால ஆசியாப் பகுதியின் நாகரிகத்தினுடைய இருப்பிடமான ஐப்பிராத்து நதியின் கீழ் பாகத்தில் இருந்த ஊர் என்ற ஊரைச் சேர்ந்தவராவார். அது தொடக்கத்தில் ஹெமேட்டிக் அல்லது டர்னியன் இனத்தவருடையதாயிருந்தது, பின்பு வெற்றி கொள்ளப் படுதலினால் அது செமேட்டிக் (சேமின் சந்ததியார்) இனத்தவருடையதாயிற்று. அது விக்கிரகாராதனை செய்யும் ஊராய் இருந்தது என்பது தெளிவு (இ.வ. ஆதி. 11:31; யோசு. 24:2).

*ஆ. அழைப்பும் உடன்படிக்கையும் (ஆதி. 12:1-3).*—இங்கு அவர் (ஆபிரகாம்) தன் வீட்டையும், இனத்தையும், சொந்த நாட்டையும் விட்டு இனி அறியப்படுத்தப்படப் போகிற நாட்டை நாடிச் செல்லும்படிக்கு தேவனுடைய அழைப்பைக் கேட்டார். இந்த அழைப்பும் இதன் விளைவும் மத ரீதியாக/மார்க்க ரீதியாக (ஆதியில் ஏற்பட்ட) வீழ்ச்சி முதற் கொண்டு (நடந்த) மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. இந்த அழைப்புடன் தேவன் தம்முடைய உடன்படிக்கையை இணைத்தார். இது நான்கு வாக்குத் தத்தங்களைத் தழுவிக் கொண்டிருந்தது: (1) ஒரு பெரிய இனம்; இது எபிரெய அல்லது யூத மக்களில் நிறைவேறிற்று. (2) ஒரு மாபெரும் பெயர். நிம்ரோத்களும், பார்வோன்களும், இராயர்களும் தாங்கள் வாழ்ந்திருந்த வேளைகளில் உலகளவில் ஒரு மாபெரும் இடத்தை நிரப்பியிருந்தார்கள், ஆனால் அவர்களில் எவர் ஒருவரும் வரலாற்றில் மிகப் பரந்த அடையாளத்தை விட்டுச் சென்றதில்லை அல்லது (மக்கள்) இனத்தின்மீது தம்மைப் பற்றியும் தமது கருத்துக்களைப் பற்றியும் அதிகமான மனப்பதிவுகளை விட்டு சென்றதில்லை. யூதர், கிறிஸ்தவர், முகம்மதியர் என்ற மூன்று மாபெரும் மதங்கள் ஆபிரகாமை (தங்கள்) விசுவாசத்தின் தகப்பனாகப் பின்னிட்டுக் கண்ணோக்குகின்றன. (3) ஒரு நாடு; இது எபிரெயர்களால் கானான் நாடு சுவாதீனம் கொள்ளப்பட்டதில் நிறைவேறியது. (4) எல்லா இனங்களின் மீதுமான ஒரு ஆசீர்வாதம்; இது ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்துவுக்குள்ளும் சுவிசேஷத்தின் உலகளாவிய அறிவிப்பிற்குள்ளும் நிறைவேறியது. எப்பொழுதும் விரிவடைந்து கொண்டிருக்கும் வட்டங்களில் இது இன்னமும் நிறைவேற்றத்தின் செயல்முறையில் உள்ளது.

*இ. இடம் பெயருதல்.*—ஒவ்வொரு தனிச்சிறந்த இனத்தின் வாழ்வும் அதன் இடம் பெயருதலில் வேரூன்றியிருக்கிறது; ஆனால் மிகச் சில இடம் பெயருதல்களே எபிரெயர்களுடையதைப் போன்று மத ரீதியாக/மார்க்க ரீதியாகத் தனிச்சிறப்புடையதாக அல்லது வரலாற்று வெளிச்சத்தில் மிகத் தெளிவாகக் கிடப்பதாக உள்ளன. எழுபத்தி ஐந்து வயதில், உறவினர் மற்றும் நாட்டுடன் உள்ள கடுமையான பிணைப்புக்களை அறுத்து தான் எங்கு போகிறோம் என்பதையே அறியாமல் புறப்பட்டுச் செல்ல வீரமிக்க விசுவாசம் அவசியமாயிருந்தது. "விசுவாசத்தினாலே ஆபிரகாம் … கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" (எபி. 11:8). இப்படிப்பட்ட ஒரு மனிதர் நீடித்திருக்கும் ஒரு இனத்தைத் தோற்றுவிக்கப் பொருத்தமானவராகவும்/தகுதியானவராகவும் - தேவனுடன் ஒருமைப்பாடு என்ற - மேன்மை மிகுந்த சத்தியத்திற்கு இடம் அளிப்பவராகவும் இருந்தார்.

அவர் (ஆபிரகாம்) தனது தந்தையான தேராகு, அனாதையாயிருந்த லோத்து என்ற தனது சகோதரன் (ஆரானுடைய) மகன், மற்றும் தனது மனைவியான சாராய் ஆகியோருடன் ஐப்பிராத்தின் மேல் பகுதியில் இருந்த ஆரானுக்குக் கடந்து சென்றார். அங்கு தேராகு இறந்து போனார், மற்றும் ஆபிரகாம் இன்னமும் தெய்வீக அழைப்புக்குக் கீழ்ப்படிந்து ஐப்பிராத்து நதியின் பள்ளத்தாக்குப் பகுதியை விட்டு கானான் நாட்டுக்குக் கடந்து சென்றார். இப்பொழுது அவர் ஒரு அந்நிய நாட்டில், வேற்றினத்தவர் மத்தியில் இருக்கின்றார். சீகேம் என்ற இடத்தில் தேவன் அவருக்குத் தரிசனமாகி உடன்படிக்கையைப் புதுப்பிக்கின்றார்: "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்"[1] பின்பு இது நாடாக உள்ளது. இடம் பெயருதல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளாக ஆபிரகாம் இடம் விட்டு இடம் அலைந்து திரிந்து கொண்டுள்ளார். அவர் (1) பெத்தேல், (2) தெற்கு, (3) எகிப்து, (4) தெற்கு, (5) பெத்தேல் ஆகிய பகுதிகளில் பயணப்பட்டார். இங்கு லோத்தும் ஆபிரகாமும் பிரிகின்றனர்: லோத்து யோர்தான் சமவெளியில் சோதோமை நோக்கிக் கூடாரம் இடுகின்றார், மற்றும் சோதோமில் குடியமர்வதில் முடிகின்றார். (6) ஆபிரகாம் தெற்கில் எபிரோனுக்கு (நீங்கிச்) செல்லுகின்றார். இது அதிகமாய்க் குடியமர்ந்த வாழ்க்கையின் மையமாகின்றது. ஆனால் கடைசி வரையிலும் அவர் கூடாரங்களிலேயே வாழ்ந்திருந்தார். ஒவ்வொரு இடத்திலும் அவர் (தமது) பலிபீடத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். கூடாரமும் பலிபீடமும் அவருடைய கானான் வாழ்வின் பண்பாய் இருக்கின்றன.

**2. எபிரோனில் குடியமர்ந்த வாழ்வு.**—இந்தக் கால கட்டத்தின் பிரதான நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

*அ. கல்தேயப் படையெடுப்பு.*—எலாமித்திய வம்சம் ஒன்று கல்தேயாவை ஆண்டு கொண்டிருந்தது. பேராசைமிக்க இந்த வம்சமானது தங்கள் நாடு பிடித்தல்(செயல்)களை தொலை தூர மேற்கில் யோர்தான் பள்ளத்தாக்கு வரையிலும் தள்ளியிருந்தது. யோர்தான் (பகுதிகளில் இருந்த) சிற்றரசர்கள் இந்த நுகத்தைப் பன்னிரெண்டு ஆண்டுகளாய்ச் சுமந்திருந்து,

அதற்குப் பின்னர் கலகம் செய்தனர். கல்தேயாவின் ஆட்சியாளராய் இருந்த ஏலாமியனான கெதர்லாகோமேர் இந்தப் புரட்சியை நொறுக்கிப் போட்டு, லோத்து உட்பட சோதோமின் மக்களை (அடிமைகளாய்) பிடித்துச் சென்றான். ஆபிரகாம் பயிற்சி பெற்ற முன்னூற்றுப் பதினெட்டு வேலையாட்களுடன் (அவர்களைத்) தொடர்ந்து துரத்திச் சென்று அடிமைகளை மீட்டுக் கொண்டு வந்தார். அவர் திரும்பி வருகையில் மெல்கிசேதேக் என்ற தெளிவாய் அறியப்படாத ஆசாரிய அரசரால் சந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கப் பட்டார். இவருக்கு ஆபிரகாம் தசம பாகம் செலுத்தினார்.

*ஆ. ஆகாருடன் திருமணம்.*—வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் பிறந்திராத நிலையிலேயே வருடங்கள் பல கடந்து சென்றன. ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாயினர். சாராளுடைய ஆலோசனைப்படி ஆபிரகாம் தங்கள் வேலைக்காரியான ஆகாரை இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார். அவள் இஸ்மவேலுக்குத் தாயானாள் மற்றும் அரபியர்களின் முன்னோரானாள்.

*இ. விருத்தசேதனம் ஏற்படுத்தப்படுதல்.*—ஆபிரகாம் தொன்னூற்றொன்பது வயதுடையவர் ஆனார். (அவரை விட) சாராள் பத்து ஆண்டுகள் இளையவளாய் இருந்தாள். உடன்படிக்கை வாக்குத்தத்தமானது இன்னமும் நிறைவேற்றப்படாமலேயே இருந்தது: ஏனெனில் சாராள் மூலமாகவே வாக்குத்தத்தம் ஏற்படுவதாயிருந்தது, அவள் (இன்னமும்) பிள்ளையில்லாதவளாய் இருந்தாள். மீண்டும் ஒருமுறை தேவன் தரிசனமாகி உடன்படிக்கையைப் புதுப்பித்து அதை இரு அடையாளங்களைக் கொண்டு முத்திரையிட்டார்: (1) தொடக்கத்தில் ஆபிராம் (உயர்வான தந்தை), சாராய் (அரசி[2]) என்றிருந்த அவர்களின் தொடக்க பெயர்கள் ஆபிரகாம் (திரளான இனங்களின் தந்தை), சாராள் (திரளான கூட்டங்களின் அரசி) என்று மாற்றப்பட்டன; (2) உடன்படிக்கையின் மக்களுக்கு என்றென்றைக்குமான சடங்கு முறையாக விருத்தசேதனச் சடங்கு அளிக்கப்பட்டது.

*ஈ. சோதோமின் அழிவு.*—யோர்தான் சமவெளியின் நகரங்கள் மட்டுமீறிய தீயொழுக்கத்தின் ஆழங்களில் மூழ்கியிருந்தன, அவைகளின் தொடர்ந்து இருத்தலானது சுற்றியுள்ள நாடுகளுக்குக் கெடுதியாக்கின. தேவன் அவைகளின் அழிவை ஆணையிட்டு, அவற்றின் முடிவை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார், ஆபிரகாமின் பரிந்துரையானது அந்த நகரங்களைக் காப்பாற்ற முடியாது போய் விட்டாலும், அது முழுமையாக இழந்து போகப்படாதிருந்தது. லோத்தின் மனைவி சோதோமை மூழ்கச் செய்த அக்கினி மற்றும் கந்தகத்தின் பெரும் புயலில் ஏக்கம் கொண்டு பேராவலுடன் தாமதித்துக் கொண்டிருந்த போதிலும் லோத்து எரியும் தழலிருந்து பற்றியிழுக்கப்பட்ட கம்பி போல் இருந்தார், லோத்து சோவாருக்குத் தப்பிச் சென்றார், அவர் தம் சொந்த மகள்களின் மூலம் மோவாபுக்கும் அம்மோனுக்கும் தந்தையானார், அவர்களின் சந்தியார்கள் எபிரெயர்களுக்கு நீடித்த (காலமாக) விரோதிகளாய் இருந்தார்கள்.

*உ. ஈசாக்கின் பிறப்பும் (அவரைப்) பலியிடுதலும்.*—இப்பொழுது ஆபிரகாம் நூறு வயதுடையவராயிருக்கின்றார், சாராள் தொண்ணூறு வயதுடையவளாய் இருக்கின்றாள். இருபத்து ஐந்து ஆண்டுகளாக அலைந்து

திரிந்து, காத்துக் கொண்டிருந்ததற்குப் பிறகு, வாக்குத்தத்தத்தின்மீது நிறைவேற்றத்தின் வெளிச்சம் உதிக்கின்றது. சாராள் ஒரு மகனைப் பெறுகிறாள், அவருக்கு ஈசாக்கு என்று பெயரிடப்பட்டது. ஆனால் இன்னும் மிகுந்த வலியுள்ள சோதனை அவர்களுக்குக் காத்துள்ளது. உறவினர்(கள்) மற்றும் நாட்டின் மீதான ஆபிரகாமின் அன்பை அவரது விசுவாசம் வெற்றி கொண்டிருந்தது. அது (விசுவாசம்) அவரது சொந்த வாரிசின் மீதான அன்பை வெற்றி கொள்ளுமா? திகைப்பூட்டும் செய்தி யானது அவரது காதுகளில் விழுகின்றது, "உன் புத்திரனும், உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ ... தகன பலியாகப் பலியிடு."[3] இப்படிப்பட்ட ஒரு கட்டளையானது நமது ஒழுக்கக் கருத்தறிவை/ஒழுக்க உணர்வறிவை அதிர்ச்சியடையச் செய்வதாய் இருக்கும். இது கடமைகளின் போராட்டமாய்க் காணப்படும். (ஆனால்) ஆபிரகாமுக்கு இது அவ்வாறு இருக்கவில்லை. மனித பலி என்பது பொதுவாக இருந்தது; (அந்த) காலம் அதினால் (மனித பலிகளினால்) நிறைந்திருந்தது, ஆபிரகாம் அதைக் குறித்து (அறிந்து) பழக்கப்பட்டிருந்தார் என்பதில் ஐயம் இல்லை. போராட்டம் அங்கு இருக்கவில்லை. மாறாக அது (போராட்டம்), ஒரு புறம் தேவனுடைய அழைப்புக்கும், ஈசாக்கின் மீதான அவரது அன்பிற்கும், மறுபுறம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் மீதான அவரது நம்பிக்கைக்கும் இடையில் இருந்தது. அவர் தமது ஆத்துமாவை அந்த வாக்குத்தத்தத்துடன் இரும்புக் கொக்கியைப் போல் இறுகப் பற்றிப் பிடித்திருந்தார். மீண்டும் ஒருமுறை விசுவாசம் வெற்றி பெற்றது (எபி. 11:17-19). இங்கு நாம் ஆபிரகாமின் விசுவாசம் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் உச்சகட்டத்தை அடைகின்றோம். அவரது மகன் காக்கப்பட்டார்; ஏனெனில் தேவன் உண்மையில் அவரை (ஈசாக்கை) பலியிடுதலை கேட்கவில்லை. அவர் (ஈசாக்கு) திருமணம் செய்வதையும், அவரைச் சுற்றிலும் (அவரது) மகன்கள் வளருவதையும் காண்பதற்கு அந்த முற்பிதா உயிர் வாழ்கின்றார். அவர் (ஆபிரகாம்) சாராளை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் அவருக்குச் சொந்தமாயிருந்த ஒரே இடமான எபிரோனின் மக்பேலா குகையில் அடக்கம் செய்கின்றார். கானானில் ஒரு நூற்றாண்டு காலம் யாத்திரைக்குப் பிறகு அவரும் கூட அவ்விடத்தில் ஈசாக்கு மற்றும் இஸ்மவேல் ஆகியோரால் அடக்கம் செய்யப்பட்டார்.

உலகமானது ஒரு சில ஆபிரகாம்களையே கொண்டிருந்ததாக இருந்துள்ளது. இது நித்தியத்தைப் பணயம் வைத்து உலக அனுகூலங்களைப் பற்றிக் கொள்ளும் லோத்துகள் பலரைக் கொண்டுள்ளது. லோத்தும் அவரது சந்ததியாரும் விடியற்காலத்து மூடுபனியைப் போல் கடந்து போயினர்; ஆபிரகாமும் அவருடைய சந்ததியாருமோ உலகத்தின் என்றென்றைக்கு மான அடைவிடத்தை உருவாக்கியுள்ளனர்.

## II. *ஈசாக்கின் வாழ்வும் பண்பும். (ஆதி. 24:1-28:9.)*

***1. ஈசாக்கினுடைய வாழ்வின் தன்மை.***—ஈசாக்கினுடைய வாழ்வு பற்றிய வரலாறு விரைவிலேயே கூறப்படுகிறது. இது ஒரு புறம் அவரது

தகப்பனுடைய வாழ்வின் வரலாற்றுடனும், மறுபுறம் அவரது மகனான யாக்கோபின் வரலாற்றுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஈசாக்கின் வாழ்வுக் காலம் ஆபிரகாமின் (வாழ்வின் கடைசி) எழுபத்தி ஐந்து வருடங் களுடனும், யாக்கோபின் (வாழ்வின் முதல்) நூற்றிருபது வருடங் களுடனும் மேற்கவிந்து/ஒரு சேர அமைந்துள்ளது. இவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சி ஒவ்வொன்றும் அவர்களின் (வாழ்வின் முக்கிய நிகழ்ச்சி களுக்கு) அதிகம் ஏற்புடையதாக உரித்தாகுகின்றது. இவர் வரலாற்றுப் பாத்திரம் என்ற வகையில், அவர்களினால் நிழலிடப்படுகின்றார். இவர் எதிர்ப்பு இல்லாமலும், அமைதியை நேசிக்கும் தன்மையுடனும் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கும்படி தமது தந்தைக்கு இணங்குகின்றார், இவரது தாயார் வாழ்ந்த வேளையில் இவர் அவளது செல்வாக்கின் கீழிருந்தார் என்பது உறுதியாக உள்ளது, மற்றும் அதன் பிறகு இவர் தமது மனைவியின் செல்வாக்கிற்கு உட்படுகின்றார், மற்றும் பிலிஸ்தியர்களுடன் (தமது) கிணறுகளுக்காகப் போராடுவதற்கு மாறாக அவற்றை ஒன்றுக்குப் பின் ஒன்றாக அவர்களுக்குக் கொடுத்து விட இணங்குகின்றார். நூற்று எண்பது ஆண்டுகள் கொண்ட அவருடைய நீண்ட வாழ்வானது தென் தேசத்தில் எபிரோனில் அல்லது அதற்கருகில் முடிந்தது. அவருடைய வாழ்வானது ஆபிரகாமினுடையதைப் போல கருங்கல் வார்ப்பாகவோ அல்லது யாக்கோபினுடையதைப் போல கொந்தளிப்பான அனுபவமாகவோ இருந்ததில்லை. இன்னமும், வாக்குத்தத்தத்தின் மகன் என்ற வகையிலும், வாக்குத்தத்தங்களின் உடன்படிக்கையின் வாரிசு என்ற வகையிலும் அவரது தகுதி நிலையானது (அந்தக்) கால கட்டத்தின் நான்கு முற்பிதாக்களின் மத்தியில் மதிப்பிற்குரிய இடம் கொண்டுள்ளது. இவர் ஆபிரகாமின் மேன்மைமிக்க விசுவாசத்தில் நடக்கின்றார், மற்றும் ஆபிரகாமுடனான உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்காக தேவன் இவருக்கு மீண்டும் மீண்டும் தரிசனமாகின்றார்.

***2. இவரது திருமணமும் குடும்பமும்.***—ஆபிரகாமின் சகோதரரான நாகோர், ஊரிலிருந்து குடும்ப இடம் பெயருதலில் ஐப்பிராத்து மீது ஆரான் வரை சேர்ந்து வந்தார் அல்லது பின்பற்றித் தொடர்ந்தார். அங்கு (ஆரானில்) அவர் தங்கி விட்டார். விக்கிரகாராதனைக்காரர்களாகிய கானானியருடன் குடும்ப இணைப்பு எதையும் ஏற்படுத்தப் பயம் அடைந்த ஆபிரகாம், மிகவும் நம்பிக்கைக்குரிய தமது வேலைக்காரனை ஆரானில் இருந்த நாகோரிடத்தில் அனுப்பினார். அவர் அங்கிருந்து பெத்துவேலின் மகளான ரெபேக்காளை அழைத்து வந்தார், அவள் ஈசாக்கின் மனைவியாகவும், ஏசா மற்றும் யாக்கோபு என்ற இரட்டைப் பிள்ளைகளின் தாயாகவும் ஆனாள்.

## III. *யாக்கோபின் வரலாறு. (ஆதி. 27:1-49:33.)*

யாக்கோபின் இரண்டு பெயர்களுக்கும் அவரது பண்பின் வேறுபாடுள்ள இரு நிலைகளுக்கும் இணையாக அவரது வாழ்வில் இரு அத்தியாயங்கள் உள்ளன. முதலாவதில் அவர் யாக்கோபு (எத்தன்) என்றுள்ளார்; இரண்டாவது பிரிவில் அவர் இஸ்ரவேல் (தேவனுடைய

பிரபு) என்றாகின்றார். அவர் தூதனுடன் போராடி வெற்றி கொண்டு வெற்றியாளராக விளங்கிய பெனியேல் என்ற இடமே (இவ்விரு பிரிவுகளையும்) பிரிக்கும் கோடாக உள்ளது. வேறு எந்த முற்பிதாவின் வாழ்வும் இவருடையது போல கிறிஸ்தவ மனமாற்றத்திற்கு இவ்வளவு இணையான ஏதொரு விஷயத்தையும் காட்சிப்படுத்துவதில்லை. மற்றவர்(முற்பிதாக்)கள் தொடக்கம் முதல் கடைசி வரை விசுவாசத்தின் வாழ்வை வாழ்ந்தார்கள். ஆனால் பிரபுவான இஸ்ரவேலோ எத்தனாயிருந்த யாக்கோபிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மனிதராய் இருந்தார்.

***1. எத்தனாயிருந்த யாக்கோபு*** (ஆதி. 27:1-32:32).—*அ. அவரது பெயர்.*—அவரது பிறப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து அவர் யாக்கோபு என்று பெயரிடப்பட்டார்; குதிங்காலைப் பிடிப்பவன், இன்னொருவரைத் தடுக்கி விழச் செய்பவர், எத்தன் (ஆள் மாறாட்டம் செய்பவர்). யாக்கோபு இளையவராயிருந்தும் தேர்ந்து கொள்ளப்பட்ட சந்ததியும் உடன்படிக்கையும் அவர் மூலமாகவே இருக்க வேண்டியதாயிற்று; ஆகவே, அவருடைய பிறப்பின் போது அவ்வாறே முன்னுரைக்கப்பட்டது, ''மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்.''[4]

*ஆ. கைவசமாய் பெற்றுக் கொண்ட பிறப்புரிமை.*—ஏசா ஒரு வேட்டைக்காரராய் இருந்தார்; யாக்கோபு ஒரு "அமைதியான" மனிதராகவும் தோட்டக்காரராகவும் இருந்தார். ஏசா வேட்டையிலிருந்து களைத்துப் போய்த் திரும்பி வருகிறார், அவர் யாக்கோபின் கூழுக்காகத் தனது பிறப்புரிமையை கொடுத்து விடத் தயாராய் இருக்கின்றார், இவ்விதமாக ஒரு கண நேர இன்பத்திற்காக/திருப்திக்காக உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை வீசியெறிந்து விடுகின்றார். இப்படிப்பட்ட பண்புடைய ஒருவர் நீடித்திருக்கும் ஒரு இனத்தைத் தோற்றுவிக்கவோ அல்லது மிக மேன்மையான ஆவிக்குரிய மார்க்கத்தைத் தோற்றுவிக்கவோ மிகச் சிறிதளவே பொருத்தமானவராயிருக்கின்றார். "அமைதியான" யாக்கோபு பிறப்புரிமையையும் உடன்படிக்கை வாக்குத்தத்தத்தையும் விலை கொடுத்துப் பெறுகின்றார், ஆனால் அவற்றை அவர் பெரும்பசியாயிருந்த தனது சகோதரனிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றார்.

*இ. களவு செய்யப்பட்ட ஆசீர்வாதம் என அழைக்கப்பட்டது.*—ஆண்டுகள் கடக்கின்றன. முதிர் வயதான ஈசாக்கு, முற்பிதாக்களுக்குரிய (தனது) ஆசீர்வாதங்களைப் பொழிவதற்குரிய காலம் வருகிறது. (தனது) பையன்களின் பிறப்பின் போது வெளியாக்கப்பட்ட தெய்வீக நோக்கத்திற்கு/தீர்மானத்திற்கு மாறாக அவர் அதை ஏசாவின்மீது பொழியத் தீர்மானித்தார். ஆனால் ரெபேக்காள் உறங்குபவளாய் இருக்கவில்லை. அவள் ஒரு வஞ்சனையை முன் மொழிகிறாள், யாக்கோபு தனது பெயருக்கேற்ப, அவளது சூழ்ச்சியின்படி செய்யத் தன்னை ஒப்புக் கொடுக்கின்றான். சூழ்ச்சி வெற்றியடைகிறது. பார்வை மங்கலான ஈசாக்கும், அங்கிராமற்போன ஏசாவும் சூழ்ச்சியால் வெல்லப்படுகின்றனர், மற்றும் அந்த முற்பிதாவின் கரங்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஆசீர்வாதங்களைத் தருவதற்கு யாக்கோபின் தலையின்மீது வைக்கப்படுகின்றன.

*ஈ. ஆரானுக்கு தப்பி ஓடுதல்.*—யாக்கோபு தனது தந்தையிடமிருந்தும்,

தனது சகோதரனிடமிருந்தும், தனக்கு பிரியமான தாயாகிய ரெபேக்காளிட மிருந்தும் பிரிந்து செல்லுதல் என்பதே அவருடைய முதல் செயல்விளவாய் இருந்தது. அவனுடைய உயிரைப் பறிக்க ஏசா தேடுகிறான். ரெபேக்காளின் ஆலோசனைப்படி, ஆரானில் (உள்ள) அவளது உறவினர்களின் மத்தியில் யாக்கோபுக்கு ஒரு மனைவியைத் தேடுவதற்காக ஈசாக்கு யாக்கோபை அனுப்புகின்றார். இது ஒரு கவலை தரும் ஓட்டமாக உள்ளது; - இதன் பின்னால் குழந்தைப் பிராயத்தின் நினைவுகள், தனது சொந்த அற்பத் தன்மையின் நிழல்கள், ஏசாவின் பழி வாங்குதலின் மாயத்தோற்றம்; இதன் முன்னால் என்ன (உள்ளதென்று) தேவன் ஒருவரே அறிகின்றார். இரவு வேளை வருகிறது. அவர் உறங்குவதற்காக விண்மீன்களின் கீழே சாய்கின்றார். பகலின் நினைவுகளிலிருந்து இரவின் கனவுகள் உருவெடுக் கின்றன. அவர் தேவனை *முற்றிலுமாகக்* கைவிட்டு விடவில்லை; அல்லது அவர் தேவனால் கைவிடப்படவும் இல்லை. ஏணியின் தரிசனத்தில் தேவன் தம்மை ஆபிரகாமின் தேவனாகவும், ஈசாக்கின் தேவனாகவும், உடன் படிக்கையின் தேவனாகவும் வெளிப்படுத்துகிறார், மற்றும் அற்பமான, தவறான, தப்பி ஓடுகிற யாக்கோபுக்கும் கூட அதன் அடைதற்கரிய அளிப்புகளைப் புதுப்பிக்கின்றார். பயபக்தியும் தாழ்மையும் அடைந்த யாக்கோபு காலையில் எழுந்து, தனக்குத் தலையணையாயிருந்த கல்லை ஒரு தூணாக நிறுத்தி, அவ்விடத்திற்குத் தேவனுடைய வீடு என்று அர்த்தப் படுகிற பெத்தேல் என்று பெயரிடுகின்றார், மற்றும் யாக்கோபு போன்ற அளித்தலுடனும் கூட இருப்பினும், யெகோவா தமது தேவனாயிருப்பார் என்று பொருத்தனை செய்கின்றார்.

உ. *ஆரானில் வாழ்க்கை.*—ஆரானில் யாக்கோபு தனது மாமனின் வீட்டில் தனது இணையைச் சந்திக்கின்றார், அவரோ, யாக்கோபு கிணற்றண்டையில் சந்தித்த முதல் சந்திப்பில் நேசித்த ராகேலை(யும்) திருமணம் செய்து கொள்வார் என்பதை அறிந்த நிலையில் முதலில் தனது மூத்த மகளான லேயாளைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவரை (யாக்கோபை) அகப்படுத்துகின்றார். வெளிநாட்டில் தங்குவதிலேயே இருபது ஆண்டுகள் கடந்து செல்கின்றன. கடைசியில், அவர் ஏராளமான உடைமைகளுடனும் எண்ணிறந்த குடும்பத்துடனும் தமது முகத்தைத் தம் பழைய இல்லம் நோக்கித் திருப்புகின்றார். அவர் கானானின் கிழக்கு எல்லைகளுக்கருகில் நெருங்கி வந்த பொழுது, தன்னைச் சந்திப்பதற்காக நானூறு மனிதர்களுடன் ஏசா அணி வகுத்து வருவதை அறிகின்றார். மீண்டும் ஒருமுறை அவரது பாவங்களும், அவரது சகோதரனின் பழி வாங்குதலும் அவருக்கு முன்பாக எழும்புகின்றது. அவரது ஆத்துமாவானது தகுதியற்ற தன்மை மற்றும் பலவீனம் ஆகியவற்றினால் மயங்கிச் சுழலு கின்றது. ஏசாவைச் சமாதானப்படுத்துவதற்காக வெகுமதிக்குமேல் வெகுமதி (வரிசையாக) அனுப்பப்படுகின்றது. குடும்பம் யாப்போக்கு நதியை கடந்து சென்றது. யாக்கோபு பெனியேலில் தனித்து விடப் படுகின்றார். பிறகு அவர் (அங்கு) யெகோவாவின் திகைப்பூட்டும்/விளங்கப் படாத தூதனுடன் இரவு முழுவதும் போராடுகின்றார். கடைசியாக இருள் மறைகின்றது; பகல் உதிக்கின்றது; சுய சித்தம் கொண்ட யாக்கோபு

இணங்குகின்றார்; பின்பு அவர் விரும்பத்தக்க ஆசீர்வாதத்தை வெற்றி கொண்ட யாக்கோபு இஸ்ரவேலாக மாற்றம் அடைகின்றார்.

***2. இஸ்ரவேல் என்னும் பிரபு.***—இதுமுதல் யாக்கோபு ஒரு புதிய மனிதனாக இருக்கிறார். சகோதரர்கள் சந்தித்து சமாதானத்துடன் பிரிகின்றனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவர்கள் தங்களின் தந்தை யினுடைய சவ அடக்கத்தில் இணைகின்றனர். தேவனுடைய அழைப்பின் பேரில், இஸ்ரவேல் பெத்தேலுக்குச் செல்லுகின்றார். அவருக்கு அன்பான ராகேல் பெத்லகேமுக்கு அருகே பெஞ்சமீனின் பிறப்பின்போது மரிக்கின்றாள். அவரது மகன்கள் தங்கள் வன்முறையினால் அவரது ஆத்துமாவைக் கலங்கச் செய்கின்றனர். அன்பார்ந்த இராகேல் மூலம் பிறந்த அன்பார்ந்த மகன் யோசேப்பு இருபதாண்டுகளாய் அவரிடமிருந்து இழந்து போகப்படுகிறார். எகிப்தை ஆண்ட அந்நிய அதிகாரியினால் பெஞ்சமீன் வற்புறுத்திக் கேட்கப்படுகிறார். ஆனால் இந்த இருளின் ஊடாகக் கடந்து செல்லுகையில் இஸ்ரவேல் யெகோவாவின் கரத்தை விட்டு (பிரிந்து) செல்லவில்லை. இந்தக் கால கட்டத்தின்போது, அவர் ஒவ்வொரு இடத்திலும் தனது பலிபீடத்தைக் கட்டியெழுப்பி, ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோருடைய உடன்படிக்கையின் தேவனைத் தொழுது கொள்ளு கின்றார். நாடு விட்டு நாடு செல்லுதல் மற்றும் எதிர்ப்புகள் மற்றும் உடன் படிக்கை(யின் மீதான) நம்பிக்கை ஆகியவை அவரது பண்பில் தங்கள் பணியைச் செய்கின்றன. யாக்கோபு இஸ்ரவேலாகின்றார், மற்றும் இஸ்ரவேல் பக்குவமாய் முதிர்ந்து, அழகுமிக்க வகையில் (முதிர்) வயதடைகின்றார். கடைசியில் மேகங்கள் விலகுகின்றன. யோசேப்பும் பெஞ்சமீனும் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றனர். வாழ்வின் கதிரவன் எகிப்தின் அமைதியில் மறைகிறான், மற்றும் அவரது எலும்புகள் எபிரோனில் இருந்த அவரது முன்னோர்களின் கல்லறையில் அவரது தகப்பனின் எலும்புகளுடன் இளைப்பாறுகின்றன.

## IV. யோசேப்பின் வரலாறு. *(ஆதி. 37:1-50:26.)*

***அறிமுகம்.***—எபிரெய மக்களுடனான யோசேப்பின் உறவானது, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் கொண்டிருந்த உறவிலிருந்து வேறுபடுகின்றது. அவர்கள் முழு உடன்படிக்கையின் மக்களுக்கு முன்னோர்களாய் இருக்கின்றனர்; கருவிலிருந்து விரிவடைந்த நாடான இஸ்ரவேலின் பன்னிரண்டு மகன்களில் இவர் (யோசேப்பு) ஒருவராக மட்டுமே உள்ளார். எதிர்கால(த்தில்) அந்த இனம் தன்னை இஸ்ரவேல் என்று அழைத்துக் கொள்ளலாம், ஆனால் யோசேப்பு மட்டுமே இஸ்ரவேல் இனம் என்றாகி விடாது. யோசேப்பு உடன்படிக்கையின் மக்களுக்குத் தலைவராயிருக்கவில்லை, மற்றும் யோசேப்பு மூத்த முற்பிதா என்ற வகையில் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்கு தேவன் அவருக்குத் தரிசனமாகவில்லை. இருப்பினும் கூட அவரும் அவரது சகோதரர்களும் முற்பிதாக்களின் காலத்திற்குரியவர்களாய் உள்ளனர், அவர்கள் முற்பிதாக்களுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர் (அப். 7:8, 9).

*யோசேப்பின் வரலாறு (இருதயத்தை) மிகவும் தொடுவதாயுள்ளது, மற்றும் அவரது பண்பு பழைய ஏற்பாட்டு வரலாற்றில் எவரொருவருடையதைக் காட்டிலும் மிகச் சிறந்த வகையில் முழுமையானதாக உள்ளது. இவர் பழைய முற்பிதாக்களின் மிகச் சிறந்த பண்பு நலன்கள் சிலவற்றை ஒன்றிணையக் கொண்டவராய் இருக்கின்றார்: ஆபிரகாமின் பலம் மற்றும் தீர்மானம், ஈசாக்கின் பொறுமை மற்றும் சாந்த குணம், யாக்கோபின் மென்மையான பிரியம், இவர்கள் யாவருக்குள்ளும் இருந்த விசுவாசம் ஆகியவை யோசேப்பிடம் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. இவரது வாழ்வானது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்: (1) கானானில் அவரது இளமைப் பருவம்; (2) எகிப்தில் அவரது மனிதப் பருவம்.*

***1. கானானில் அவரது இளமைப் பருவம்.***—*இந்தக் கால கட்டத்தின் நிகழ்ச்சிகள் பின்வரும் இரண்டு உண்மைகளால் வடிவாக்கப்படுகின்றன:*

*அ. அவருடைய தந்தையின் (இவர்மீது மட்டுமான) நலம் பேணும் தன்மை.*—*இவர் (யோசேப்பு) அவரின் (யாக்கோபின்) முதிர் வயதில் பிறந்த மகனாய் இருந்தார், இவர் ராகேலுக்குப் பிறந்த முதல் மகனாய் இருந்தார், அவளையே அவர் (யாக்கோபு) தனது உண்மையான மனைவியாக மதித்தார். யோசேப்பு தன்னிலேயே கொண்டிருந்த அன்புகாட்டக்கூடிய பண்பும் இன்னொரு காரணமாயிருந்தது என்பதில் சந்தேகமில்லை. யாக்கோபின் ஆழ்ந்த பிரியமானது தன்னைப் பல்வேறு வழிகளில் (வெளிக்) காண்பித்தது; குறிப்பாக, பிரபுக்கள் அணிவது போன்ற பல வண்ணங்கள் (அல்லது முழு கை அங்கி) கொண்ட ஒரு மேலங்கியில் - இது ஒரு வேளை அவர் (யாக்கோபு) பிறப்புரிமையை அவருக்கு (யோசேப்புக்கு) மாற்றுவார் என்று அர்த்தப்படுத்தியிருக்கலாம் - ஆழ்ந்த பிரியம் காண்பிக்கப்பட்டது. விரைவிலேயே இதன் செயல்விளைவானது மூத்த சகோதரர்களின் பொறாமையில் தோன்றியது. அது யோசேப்பைத் தன்னிலேயே பாழாக்கி விடவில்லை என்பது அவரது இயல்பின் தனிச் சிறந்த பலத்திற்கு ஆதாரமாக உள்ளது, ஏனெனில் அதிகமான ஈடுபாடு என்பது இழப்பைக் காட்டிலும்/ கை விட்டு விடுதலைக் காட்டிலும் அதிகமான (அளவில்) பண்புகளை அழித்து விடுகிறது. யோசேப்பு பிற்பாடு தனது தந்தையின் கூடாரத்தில் வலுவிழந்த சூழ்நிலையில் காட்சிப் படுத்திய ஆரோக்கியமான வளர் மனிதப் பண்பை மேம்படுத்தியிருப்பாரா என்பது கூடச் சந்தேகமே.*

*ஆ. அவருடைய சகோதரர்களின் ஆழ்ந்த வெறுப்பு.*—*இது யோசேப்பின் இரண்டு கனவுகளால் வலுப்படுத்தப்பட்டது. ஒரு கனவில் அவர்களின் கதிர்க்கட்டுகள் அவருடைய கதிர்க்கட்டைப் பணிந்து வணங்குகின்றன; இரண்டாம் கனவில் சூரியனும், சந்திரனும், பதினோரு விண்மீன்களும் அவருக்குப் பணிவாக வணக்கம் தெரிவிக்கின்றன - இது அவர் பிறப்புரிமையை எதிர்நோக்கினார் என்பதற்கான கூடுதலான ஆதாரமாக அவர்களுக்குத் தோன்றுகிறது. பொறாமை வெறுப்பைப் பிறப்பிக்கிறது; வெறுப்பு கொலையின் கருமுளையாக உள்ளது. யாக்கோபு யோசேப்பை எபிரோனில் இருந்த அவர்களின் குலமரபு இல்லத்திலிருந்து அவரது (யோசேப்பின்) ஆடுமேய்க்கும் சகோதரர்களிடத்தில் அனுப்புகின்ற பொழுது அவர்களின் வாய்ப்பு வருகின்றது, அவர்கள் சீகேமில் கண்படும்*

இடத்தில் தங்கள் மந்தைகளுடன் இருக்கின்றனர். "இதோ, சொப்பனக் காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் என்று பார்ப்போம்."[5] கொஞ்ச காலம் சென்ற பிறகு அவரை (யோசேப்பை) அவரது தந்தையிடம் மீட்டுக் கொண்டு போக நினைத்த ரூபன், அவரை (யோசேப்பை) குழியில் போடலாம் என்ற திட்டத்தை முன்மொழிந்தார். ரூபன் இல்லாத பொழுது, யூதாவின் ஆலோசனைப்படி யோசேப்பு எகிப்துக்குச் செல்லும்படி ஒட்டகங்கள்மீது அவ்வழியே பயணம் செய்யும் வர்த்தகக் குழுவினரிடம் விற்கப்படுகின்றார். வெறுக்கப்பட்ட (பல வண்ண) மேலங்கியானது ஆட்டுக்குட்டியொன்றின் இரத்தத்திலே தோய்க்கப்படுகிறது, இது, ஆழ்ந்த அன்புடைய தந்தை, யோசேப்பு காட்டு மிருகங்களுக்கு இரையாகி விழுந்தார் என்று நம்பும்படி அவரை மோசம் போக்குகிறது. குடும்பக் குற்றம் மற்றும் துக்கத்தின் காட்சியுடன் திரை விழுகின்றது.

***2. எகிப்தில் அவரது (முழு) மனிதப் பருவம்.***—*அ. அவரது அடிமை வாழ்வு.*—பார்வோனின் தலையாரிகளுக்கு அதிபதியான போத்திபாரின் அடிமை என்ற வகையில் அவரது (யோசேப்பின்) திறமையும் உண்மைத் தன்மையும் விரைவிலேயே அவரைத் தமது எஜமானரின் வீட்டாருக்குத் தலைவராக்குகின்றது. அவரது உண்மை/ஒழுக்க நெறியே அவருக்கு அழிவு தருவதாகப் பயமுறுத்துகிறது. போத்திபாரின் மனைவியினால் தவறாகக் குற்றம் சாட்டப்பட்ட யோசேப்பு சிறையில் அடைக்கப்படுகின்றார்.

*ஆ. அவரது சிறைவாழ்வு.*—யோசேப்பு நம்பிக்கையிழந்து கீழே உட்கார்ந்து விடுகிற மனிதராக இருக்கவில்லை. சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்கையிலும் கூட துணிவுடனும் உதவி செய்யும் பண்பு டனும் இருந்த அவர், மீண்டுமாக நம்பகத் தகுந்த இடத்திற்கு எழும்பு கின்றார். சக கைதிகள் இருவரின் கனவுகளுக்கு அர்த்தம் விளக்கிக் கூறிய திலிருந்து அவர் பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் கூறும்படி அழைக்கப் படுகின்றார். அது பூமியின் மிகவும் பெருமை வாய்ந்த அரசின் ஏறக்குறைய மிக உன்னதமான அதிகாரத்திற்குப் படியெடுத்து வைக்கும் கல்லாயிருந் ததை நிரூபிக்கின்றது.

*இ. அவரது அரசவை வாழ்வு.*—யோசேப்பு, எகிப்தின் ஆளுநர் என்ற வகையில், பார்வோனின் கனவுகளினால் முன் நிழலிடப்பட்ட ஏழாண்டு கள் பஞ்ச காலத்திற்கு எதிராக, வளமான ஏழாண்டுகளில் தானியத்தை/ கோதுமையைச் சேர்த்து வைக்கின்றார். வளமான வருடங்கள் கடந்து செல்லுகின்றன; பஞ்சமான ஆண்டுகள் வருகின்றன, அவற்றுடன் தானியத் திற்காக யோசேப்பின் சகோதரர்கள் வருகின்றனர். இப்பொழுது (இது) அவருடைய வாய்ப்பாக உள்ளது. அவர்களை ஒற்றர்கள் என்று அவர் பிடித்து வைக்கின்றார். சிமியோனைப் பிணையமாக வைத்துக் கொண்டு மற்றவர்களை அவர் விடுவிக்கின்றார், ஆனால் பெஞ்சமீனை அழைத்துவரா விட்டால் மீண்டும் அவர்களைக் காண்பதற்கு அவர் மறுத்து விடுகின்றார். முதிர் வயதான முற்பிதா (யாக்கோபு) முதலில் பெஞ்சமீனை விட்டுப் பிரிய

மறுக்கின்றார்; ஆனால் பசி என்பது கடினமான எஜமானராய் உள்ளது, (எனவே) கடைசியாக அவர் யூதா உத்திரவாதம் அளிக்க முன் வந்ததன் பேரில் (பெஞ்சமீனை) அவர்களுடன் அனுப்பச் சம்மதிக்கின்றார். அவர்களின் இரண்டாம் வருகையின் போது, யோசேப்பு தமது பான பாத்திரத்தை பெஞ்சமீனின் (தானியச்) சாக்கு மூட்டையில் வைக்கச் செய்து, சகோதரர்கள்மீது திருட்டுக் குற்றம் சாட்டுகின்றார். பிறகு அவர்கள் தங்களுக்கு நேர்ந்த பெருந்துன்பங்களைத் தங்கள் குற்றத்துடன் தொடர்பு படுத்தத் தயாரானபொழுது மனச்சாட்சி எழுப்பப்படுகிறது, கடைசியில் யூதா மாண்புமிக்க வகையில் தம்மையே பெஞ்சமீனுக்குப் பதிலாக அடிமையாக ஒப்புக்கொடுக்கின்றார், யோசேப்பு தம்மை அறியப்படுத்து கின்றார், மற்றும் அவர்களின் குற்றத்தைத் தாராள(குண)மாக மன்னிக் கின்றார். யாக்கோபு (எகிப்துக்கு) அழைத்து வரப்படுகின்றார், மற்றும் உடன்படிக்கையின் மக்கள் எகிப்தில் இருக்கையில் காலம் முடிவடைகிறது. ஆனால், யோசேப்பு எகிப்திலேயே மரித்து அடக்கம் செய்யப்பட்டாலும், மரிக்கும் வேளையில் அவர் கொடுத்த கட்டளையானது (ஆதி. 50:24, 25), உடன்படிக்கை(யின்) வாக்குத்தத்தங்களிலும் தம் மக்களின் எதிர் காலத்திலும் அவர் விசுவாசம் எவ்வளவு உறுதியாய் உள்ளது என்பதைக் காண்பிக்கிறது.

யோசேப்பின் நல்லொழுக்கம் ஒரு ஒருமையான நேர்மையாக உள்ளது. அவர், கற்பனை செய்யப்படக் கூடிய ஒவ்வொரு சோதனைக்கும் ஆளானார்; அவரது தந்தையின் ஒரு தலைப்பட்சமான பாசம், சகோதரர் களின் பொறாமை மற்றும் முற்றிலுமான சேதம், சுத்தமற்ற பெண்ணொருத் தியின் பொய்க் குற்றச்சாட்டுகள், ஒழுக்கமுடைமை குற்றத்தின் தண்டனை யைச் சுமத்தல், மதிப்பும் வல்லமையும்/அதிகாரமும் திடீரென்று உயருதல், ஒவ்வொரு தவறுக்கும் பழி தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு - இவை அவரது வாழ்வில் இடர்ப்பாடுமிக்க அனுபவங்களாய் இருந்தன. வேறு எந்த மனிதரும் எக்காலத்திலும் இவ்வளவாய்ச் சோதிக்கப்பட்டதில்லை; வேறு எவரும் இவ்வளவாய் வெற்றியடைந்ததுமில்லை. மனித குல மன்னிப்பின் வரலாற்றில் இவர் மிக உன்னதமான முன்னுதாரணமாய்த் திகழுகின்றார்; ஆபிரகாம் கூட தமது விசுவாசத்தில் இவ்வளவு சீராக வெற்றியடைந்த தில்லை. பிறகு ஏன் யோசேப்புக்கு மாறாக ஆபிரகாம் "விசுவாசத்தின் தந்தை" என்று மதிப்பளிக்கப்படுகின்றார்? ஏனெனில் அவர் "விசுவாசப் பயணத்தின் கொலம்பஸ்" ஆக இருந்தார் என்பது தெளிவு. அறியப்படாத சமுத்திரங்களில், அறியாத நாட்டை நோக்கி ஆபிரகாம் பயணம் செய்தார். யோசேப்போ, ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் இருந்து நிறைவேற்றிய வெளிச்சத்தில் தமது பயணத்தை மேற்கொண்டார்.

## V. யோபுடைய புத்தகம்.

யோபுடைய புத்தகம் இந்தக் காலத்தைச் சேர்ந்ததாக உள்ளது. பல நூற்றாண்டுகளினால் இது அவ்வளவு முன்னதாக எழுதப்பட்டிருந்தது என்பதல்ல; ஆனால் இதன் நிகழ்ச்சிகள், காட்சிகள், திரைகள், முழுத்தொனி

ஆகியவை முற்பிதாக்களுக்குரியவைகளாக உள்ளன. யோபு கிழக்கத்திய (நாட்டின்) வல்லமைமிக்க பெரிய மனிதராய் இருக்கின்றார், இவரது உடமைகளையும் பிள்ளைகளையும் சூறையாடவும், அவரை வெறுக்கத் தக்க வியாதியினால் உபத்திரவப்படுத்தவும் சாத்தானை தேவன் அனுமதிக் கின்றார்.[6] மூன்று நண்பர்கள் அவரை ஆறுதல்படுத்த வருகின்றனர். இப்புத்தகத்தின் முக்கிய பகுதியில்/பொருளடங்கலில் யோபுவுக்கும் அவரது மூன்று நண்பர்களான எலிப்பாஸ், பில்தாத் மற்றும் சேப்பாருக்கும், எலிகூ என்ற பெயர் கொண்ட இன்னொருவருக்கும், மற்றும் யெகோவா விற்கும் இடையே நடக்கும் மாபெரும் கவிதைத்துவமான வாதம் அடங்கியுள்ளது. யோபு தனது நேர்மையைக் காத்துக் கொள்கின்றார், மற்றும் தமது முன்னைய வளமையிலும் இரு மடங்கை மீண்டும் பெறுகின்றார். அநேகமாக, இந்தப் புத்தகமானது உயர் குறிக்கோள் கொண்ட முற்பிதாக்களின் வரலாற்றினுடைய ஒரு துணுக்காக உள்ளது. இது கவிதைத்துவமான விரிவாக்கமும் அலங்காரமும் சேர்ந்துள்ள வரலாற்றுப்பூர்வமான ஆதாரத்தைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சிகளின் நாடகத்துவமான வளர்ந்தேறுதலும் தொடர்பும், முன்னேற்பாடற்ற உரையாய் இருக்க (கூடாத அளவுக்கு) மிக விரிவானதாகவும், கவிதைத்துவ மானதாகவும் இந்தக் கண்ணோட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. வாதத்தின் கருப்பொருளாக உள்ளது தீமையின் பிரச்சனை—பண்பிற்கு பெருந்துன்பத்துடன் உள்ள தொடர்பு—ஆகும்; மனிதர்களை அவர்கள் காண முடியாதவற்றின் மீது நம்பிக்கை வைக்கும்படி வழிநடத்துதல் என்பது நோக்கமாக உள்ளது.

## குறிப்பு.

## முற்பிதாக்கள் காலத்தின் சில பண்புகள்.

***1. இது நாடோடித்துவமானதாக இருந்தது.***—ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் மேனெஸ், நிம்ரோத் மற்றும் ஆசூர் போன்றவர் களைப் போல் நகரங்களைத் தோற்றுவித்தவர்களாயிராமல், இனத்தையும் விசுவாசத்தையும் தோற்றுவித்தவர்களாயிருந்தனர். இவர்கள் கூடாரங் களில் வாழ்ந்தனர். இவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்றனர். இருப்பினும் இவர்கள் நோக்கமற்று அல்லது சட்டத்திற்கு விரோதமாக சுற்றித்திரிபவர்களாய் இராதிருந்தனர்; இவர்கள் *பயணிகளாய்,* தேவனு டைய அழைப்பின் பேரில் இடம் பெயர்ந்து, மேன்மையான, தொலை தூரத்தில் அடையப்பெறும் நோக்கத்தினால் ஏவப்பட்டு பயணிப்பவர் களாய் இருந்தனர்.

***2. இது முற்பிதாக்களுடையதாக இருந்தது.***—தந்தை என்பவர் *(அ)* குடும்பத்தின் அதிகாரியாக இருந்தார். அவர் (குடும்பத்தின்) வாழ்வு மற்றும் மரணத்தின்மீது அதிகாரம் கொண்டிருந்தார். (ஆதி. 22:10; 28:24ஐக் காணவும்.) *(ஆ)* இராணுவத் தலைவராய் இருந்தார். ஆபிரகாம் மெசொபொத்தோமியர்களுக்கெதிராக ஒரு படையெடுப்புக்குத் தலைமை வகித்தார். *(இ)* குடும்ப ஆசாரியராக இருந்தார். அவர் பலிபீடத்தைக் கட்டி

குடும்பத்திற்காக பலி செலுத்துகிறார். *(ஈ) குடும்பத் தீர்க்கதரிசியாக* இருந்தார். தேவன் தமது சித்தத்தையும் நோக்கங்களையும் இவருக்கும் இவர் மூலமாகவும் அறியச் செய்கின்றார்.

***3. தேவனைப் பற்றிய கருத்துருவாக்கங்கள்.***—முற்பிதாக்கள் பின்வரும் கருத்துக்களை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தார்கள்: *(அ) தேவனுடைய ஒருமைத் தன்மை.* பல தெய்வ வணக்கம் பெரு வழக்கமாயிருந்தமைக்கான சுவடு/அடையாளம் எதுவும் இருப்பதில்லை. *(ஆ) தேவனுடைய ஆளுமைத் தன்மையில்* எகிப்தில் மிக அதிகமாக இருந்தது போல இயற்கையை வழிபடுதலின் தொடுகை எதுவும் இருப்பதில்லை. *(இ) தேவனுடைய உலகளாவிய தன்மை.* அவர் முழு உலகத்திற்கும் தேவனாயிருக்கின்றார் (ஆதி. 18:25); பார்வோனுடைய தேவனே ஆபிரகாமுக்கும் இஸ்ரவேலுக்கும் தேவனாக இருக்கிறார்; அவர் நைல் மற்றும் ஐப்பிராத்து மேலும், யோர்தான் மேலும் கூட ஆளுகை செய்கின்றார். *(ஈ) தேவனுடைய பரிசுத்த தன்மை.* அவர், புறமார்க்கத் தெய்வங்களின் குற்றங்களினால் ஒருக்காலும் உருக்கலைக்கப்படுவதில்லை. பூமி முழுவதற்கும் நியாயாதிபதியாக உள்ளவர் சரியானதையே செய்வார் (ஆதி. 18:25).

***4. ஆராதனையின் வடிவங்கள்.***—ஆலயங்களோ அல்லது எடுத்துரைக்கப்பட்ட பண்டிகைகளோ இருந்ததில்லை; பின்னாளில் வந்த மோசேயின் பிரமாணமானது தேவன் படைப்பு (தொழிலில்) இருந்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததின் அடிப்படையில் அமைந்திருந்தாலும், (முற்பிதாக்களின் யுகத்தில்) ஓய்வு நாளை ஆசரித்ததற்கான குறிப்பிட்ட சுவடு/அடையாளம் எதுவும் இருப்பதில்லை, மற்றும் காலத்தின் வாராந்திரப் பிரிவுக்கான அடையாளங்கள் உள்ளன (ஆதி. 8:10-12). கரடு முரடான பலிபீடங்களும், மிருக பலியும், பரிசுத்தப் படுத்தப்பட்ட நினைவு(ச் சின்னங்)களும், பொருத்தனைகளும், பயணங்களும், ஜெபங்களும், தசம பாகங்களும், மற்றும் விருத்தசேதனச் சடங்கும் இருந்தன.

***5. நாகரிகத்தின் அளவு.***—முற்பிதாக்கள் நாடோடிகளாய் இருந்த போதிலும், அவர்கள் நாகரிகமற்ற காட்டு மிராண்டிகளாய் இருந்ததில்லை. அவர்கள் கல்தேயாவிலும் எகிப்திலும் அந்தக் காலத்திலிருந்த மிகவுயர்ந்த நாகரிகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் மேய்ப்பர்களாய் இருந்தார்கள், ஆயினும் விவசாயத்தைச் செயல் (முறைப்) படுத்தினார்கள். அவர்கள் பணமும் ஆபரணமும் வைத்திருந்தார்கள்; யூதா ஒரு முத்திரை மோதிரம் வைத்திருந்தார், மற்றும் யோசேப்பு பிரபுக்களுக்குரிய ஆடை கொண்டிருந்தார்; மற்றும் அவர்கள் நைல், ஐப்பிராத்து சமவெளிகளில் மலர்ந்த எழுத்துக் கலையிலும் பழக்கம் கொண்டிருந்தார்கள் என்பது பொருத்தமற்றதாக இருப்பதில்லை.

***6. உடன்படிக்கையின் முக்கியத்துவம்.***—ஆபிரகாமுடனான உடன் படிக்கையானது முற்பிதாக்கள் காலத்தின் மற்றும் எபிரெயர்களின் முழு வரலாற்றின் முக்கியமானதாக உள்ளது. இவ்வரலாறு வலுமிக்க வகையில் மனிதத்துவமானதாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இடம் பெயருதல்கள், குடும்ப மற்றும் இன வாழ்வு ஆகியவற்றில் இயல்பான நோக்கங்கள் தங்கள் பங்குப்பணியைச் செய்கின்றன. ஆனால் உடன்

படிக்கைதான் படைப்பாற்றல்மிக்க உண்மை மற்றும் சக்தியாக உள்ளது. அதுதான் எபிரெயர்களை உலகின் தனிச் சிறந்தவர்களாக்கிற்று. அதுதான் அவர்களை, ஒரு நாட்டையும், ஒரு இனத்தையும் மற்றும் எல்லா இனங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய ஒரு "சந்ததியையும்" தொடர்ந்து முன் கண்ணோக்கும்படி வழிநடத்தியது. தொடக்கத்தில் ஆபிரகாமுடன் கல்தேயாவில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையானது கானானில் அவருக்கு ஐந்து அல்லது ஆறு முறைகள் உறுதிப்படுத்தப் பட்டது, ஈசாக்குக்கு புதுப்பித்து விளக்கப்பட்டது, மற்றும் யாக்கோபுக்கு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையிலேயே யோசேப்பு தன் மரண வேளையில் கட்டளை கொடுத்தார்; அதே வேளையில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அது மோசேக்கு எரியும் புதரில் புதுப்பிக்கப் பட்டு, இனத்திற்குரிய உடன்படிக்கையாக சீனாய் மலையில் விரிவாக்கப் பட்டது. ஒரு மனிதனின் அல்லது மக்களின் பண்பின்மீதான இப்படிப் பட்ட விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் படைப்புருவாக்க வல்லமைக்கு அளவென்பதே இருப்பதில்லை.

குறிப்புகள்

[1]ஆதி. 12:7. [2]இவ்விடத்தில் டீன் அவர்கள் "சண்டையிடுன்றவள்" என்று குறிப்பிட்டிருந்தார். [3]ஆதி. 22:2. [4]ஆதி. 25:23. [5]ஆதி. 37:19, 20. [6]இவ்விடத்தில் டீன் "suffered" என்று எழுதியிருந்தார்.